பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 06 2025 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. **சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.**

**2.** நாட்டில், கடந்த 11 ஆண்டுகளில் 25 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையின் பிடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**3.** வேளாண் விளைப்பொருட்களை தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை அமைப்புமூலம் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்படும் என்று மத்திய அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**4.** இஸ்ரேல் - ஈரான் இடையே எட்டாவது நாளாக சண்டை நடைபெற்றுவரும் நிலையில், பதற்றத்தை தணிப்பது குறித்த முயற்சியை ஈரான் மேற்கொண்டுள்ளது.

**5.** ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் வெண்கலப்பதக்கம் வென்றார்.

--இனி விரிவான செய்திகள்--

**<<<<<<>>>>>>**

சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை தாம்பரத்தில் உள்ள தேசிய சித்த மருத்துவ மையத்தில் நாளை நடைபெறும் யோகா நிகழ்ச்சியில், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்துகொள்கிறார்.

சேலத்தில் நடைபெறும் யோகா நிகழ்ச்சியில் மத்திய எஃகு அமைச்சர் திரு குமாரசாமி தேவகவுடா கலந்துகொள்கிறார்.

தமிழகத்தில் செயல்படும் மத்திய அரசின் அலுவலகங்களில் யோகா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

முப்படையினர் கலந்துகொள்ளும் யோகா நிகழ்ச்சிக்கும் சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துகொள்ளும் யோகா நிகழ்ச்சி நாடு முழுவதிலும் உள்ள ஆகாஷவாணியின் அனைத்து வானொலி நிலையங்களில் நேரடி ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

இதனையொட்டி, நாளை காலை மணி 6.45-க்கு ஒலிபரப்பாகும் மாநிலச் செய்திகள், காலை எட்டு மணிக்கு ஒலிபரப்பாகும்.

ஏழு மணிக்கு ஒலிபரப்பாகும் சுழல் விளக்கு நிகழ்ச்சி, பிற்பகல் மணி 2.15-க்கு ஒலிபரப்பாகும்.

யோகா மனதையும், உடலையும் செம்மைப்படுத்துவதாக சென்னையை சேர்ந்த யோகா ஆசிரியர் திரு ராஜேஷ் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

தேசிய ஜனநாயக கூட்டணி நாட்டின் வளர்ச்சியின் சின்னமாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலத்தில் 5 ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை **Saiwan**—ல் காணொலி வாயிலாக தொடங்கிவைத்தபின் உரையாற்றிய பிரதமர், உலகில்

மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுத்து வருவதை உலக நாடுகள் போற்றுவதாக குறிப்பிட்டார்.

கடந்த 11 ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி பீகார் மாநிலத்தை விரைவான வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றுள்ளதாக அவர் கூறினார்.

மேலும் பல புதிய திட்டங்களை இம்மாநிலத்தில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அனைவரின் ஒத்துழைப்புடன், அனைவருக்குமான வளர்ச்சி என்ற கொள்கையுடன் தங்கள் கூட்டணி செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மாநிலத்தின் வளர்ச்சியையும், இளைஞர்களின் எதிர்காலத்தையும் கருத்தில்கொண்டு, மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில், கடந்த 11 ஆண்டுகளில் 25 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காணொலி வாயிலாக தாம் இன்று தொடங்கிவைத்துள்ள பாடலிபுத்திரம் - கோரக்பூர் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் உத்தரப்பிரதேசத்தின் பூர்வாஞ்சல், பீகாரின் குஷி நகர், பாபா கோரக்நாத் உள்ளிட்ட சுற்றுலத்தலங்களை மேம்படுத்தும் என்றும் பிரதமர் கூறினார்.

பீகார் மாநிலத்தில் பிரதமரின் வீட்டுவசதித் திட்ட ஒதுக்கீடு, ரயில்வேத் திட்டங்கள் ஆகியவற்றையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

கங்கை ஆற்றை தூய்மைப்படுத்துவதற்கு நவாமி கங்கா திட்டத்தின்கீழ், ஆறு புதிய திட்டங்களையும் பிரதமர் இன்று தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>>

வேளாண் விளைப்பொருட்களை விவசாயிகளிடமிருந்து தேசிய வேளாண் கூட்டுறவு அமைப்பு **Nafed** மூலம் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று சர்வதேச கூட்டுறவு ஆண்டையொட்டி நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய அவர், இடைத்தரகர்களின் தலையீடு இன்றி விவசாயிகள் நேரடியாக **Nafed** கொள்முதல் செய்வதால், விளைப்பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

கூட்டுறவு அமைப்பின்மூலம், காப்பீடு நிறுவனம் ஒன்று தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் இரண்டு லட்சம் புதிய தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்த பத்தாண்டுகளில் கூட்டுறவுத்துறை விரிவான அளவில் வளர்ச்சிபெறும் என்றும் அவர் கூறினார்.

ஏற்றுமதி, இயற்கை வேளாண் பொருட்கள், விதை உற்பத்தி உள்ளிட்ட முக்கிய துறைகளில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம், விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**Nafed** அமைப்பு மூலம் புதிதாக ஐந்து வேளாண் உற்பத்திப்பொருட்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டில் சரக்கு போக்குவரத்துக்கான செலவு கடந்த சில ஆண்டுகளில் கணிசமாக குறைக்கப்பட்டிருப்பதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

அவர் எமது புதுதில்லி செய்திப்பிரிவுக்கு அளித்த பேட்டியில், போக்குவரத்து செலவை மேலும் ஒன்பது சதவீதம் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளதாகவும், இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

திரு நிதின்கட்கரி பங்கேற்கும் இந்த நேர்முக நிகழ்ச்சி எஃப் எம் கோல்டு அலைவரிசையில் இன்றிரவு ஒன்பதரை மணிக்கு ஒலிபரப்பாகவுள்ளது.

<<<<<<>>>>>>

நாட்டின் வளர்ச்சியில் கூட்டுறவு அமைப்புகள் முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று சர்வதேச கூட்டுறவு ஆண்டையொட்டி நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் உரையாற்றிய அவர், விவசாயிகளின் வருமானத்தை பெருக்கவும், வேளாண் தொழில்கள் மூலம் அவர்களின் வருமானத்தை உயர்த்தவும் கூட்டுறவு அமைப்புகள் மூலம் மத்திய அரசு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

இயற்கை சமநிலையை பாதுகாக்கும் வகையில் ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற இயக்கம் கூட்டுறவு அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வது, விவசாயிகளின் வருவாயை பெருக்குவது, அனைத்து மக்களுக்கும் சத்துமிக்க உணவுப்பொருட்கள் கிடைப்பது, சுகாதார பாதுகாப்பு ஆகியவற்றை முன்நிறுத்தி மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சத்தீஸ்கரில் செயல்பட்டு வந்த நக்சலைட் அமைப்பை சேர்ந்த 12 பேர் தெலங்கானாவின் பத்ராதிரி கோத்தக்குடம் மாவட்டத்தில் காவல்துறையினரிடம் இன்று சரணடைந்தனர்.

இதுவரை இம்மாவட்டத்தில் 294 நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளனர்.

இதனிடையே, சத்தீஸ்கரின் கன்கர் மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின்போது பெண் நக்சலைட் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

<<<<<<>>>>>>

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் தொடர் மழை காரணமாக கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கான நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதன் காரணமாக, கபினி அணையிலிருந்து காவிரியாற்றில் வினாடிக்கு 17 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுவதால், தமிழகத்தில் உள்ள ஒகேனக்கல் அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

தரமான பொருட்களை மக்கள் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில், பள்ளி அறிவியல் ஆசிரியர்களுக்கான தர நிலைகள் வழியாக “அறிவியலை கற்றல்” என்ற பயிற்சித்திட்டம் தமிழகத்தின் வேலூரில் இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>

இஸ்ரேல் – ஈரான் இடையே தொடர்ந்து எட்டாவது நாளாக சண்டை நடைபெற்று வருகிறது.

இருதரப்பில் இருந்தும் ஏவுகணை தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **‘Abbas Araghchi ’** ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் ஜெனிவாவில் பேச்சு நடத்தினார்.

பதற்றத்தை குறைப்பதற்கான முயற்சிகள் குறித்து அவர் ஆலோசனை நடத்தினார்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

**ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.**

**மலேசியாவில் இன்று நடைபெற்ற இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் அவர் 1-3 என்ற புள்ளிக்கணக்கில் ஹாங்காங்கின் Lau Tsz Kwan- விடம் தோல்வியடைந்தார்.**

**---------------**

**இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா சற்றுமுன்வரை 39 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 159 ரன் எடுத்துள்ளது.**

**Leeds மைதானத்தில் இன்று தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்து வீச தீர்மானித்தது.**

**-------------**

**ஆசிய ஜுனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கப்பதக்கம் வென்றது.**

**வியட்நாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 63 கிலோ எடைப்பிரிவில் சுமித் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.**

**<<<<<<>>>>>>**